# கலை - இசை

**நுண்கலைகள்**

**டிஜிட்டல் சித்திரங்கள்**

## வெங்கட் சாமிநாதன்

01 . 05 . 04 & 16 . 05 . 04 – Ulagatamil . com.

தான் உருவாக்கியிருந்த ஓவியங்கள் சிலவற்றை ஒவ்வொன்றாகக் காண்பித்தார் அப்போது அறிமுகமான ஸ்ரீனிவாசன். ஒவ்வொன்றும் ப்ரௌன் காகிதத்தால் சுற்றப்பட்டு, பாதுகாப்பாகக் கட்டப்பட்டிருந்தது. முதலில் வந்தது, சுற்றியிருக்கும் இருளில், தனித்து ஒளிவீசித் தெரியும் குதிரை வாகனம் போன்ற ஒன்று. பளீரிடும் சிகப்பில் அது தகதகத்தது. அதைப் பார்த்ததும், சட்டென எனக்குத் தோன்றியதைக் கேட்டேன்: "கணேஷ் பைன் ஓவியங்களைப் பார்த்திருக்கிறீர்களா?" கணேஷ் பைன் இன்று வங்காளத்தில் மிகப் புகழ் வாய்ந்த ஓவியர். டெம்ப்பராவில் வரைபவர். சிறிய அளவில் 2½ x 1½ அல்லது கிட்டத்தட்ட 3' x 2' அடி நீள் சதுர ஓவியங்கள். ஒரு மாதிரியான இருண்ட பின்னணியில், மங்கலான ஒளியில் பிரகாசிக்கும் ஒரு பிரமை நிலையில் தோற்றம் அளிக்கும் உருவங்களை வரைபவர். "இதெல்லாம் கம்ப்யூட்டரில் வரைந்த டிஜிட்டல் சித்திரங்கள்" என்றார் ஸ்ரீனிவாசன்.

சட்டென, சென்னை முழுதும் ஆங்காங்கே, பிரம்மாண்ட அளவில் சினிமாவிற்கும், செல்போன்களுக்கும் காணப்படும் விளம்பரங்கள் திரையோடின. மிக நேர்த்தியானவை பூரணத்வம் பெற்றவை. கலர் போட்டோவைப் பெரிதாக்குவது போன்ற காரியம். தொழில்நுட்பத்தின் பிரதிமைகள். விளம்பரத்தின் உள்ளடக்கமும் அமைப்பும்தான் (design) மனிதனின் இடையூறு. தொழில்நுட்பம் யாந்திரிகமானதுதான். அதைக் கலையாக உயர்த்துவது எது? மிகச் சிறந்த புகைப்படக் கலைஞர்கள் சிலர் மனத்தில் திரையோடினார்கள்.

கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர் நினைவுக்கு வந்தார். பெயர் மறந்துவிட்டது. அவர் நேருவையும், சர்ச்சிலையும் மணிக்கணக்கில் உட்காரவைத்துவிடுவாராம். கடைசியில் 'க்ளிக்' செய்யும் தருணம் எது என்று அவர் முடிவெடுக்கும்வரை. மனிதரது உள்ளடங்கிய குணச்சித்திரத்தையே அது வெளிப்படும் கணம்வரை காத்திருந்து பதிவுசெய்துவிடுபவர் என்று பெயர்பெற்றவர். பதிவு என்ற குணத்தை மீறிய புகைப்படப் பிரதிக்கும், காமிராவுக்கும் பின்னே இருப்பது அக்கலைஞனின் அசாதாரண தீக்ஷண்யம். ஹென்ரி கார்ட்டியே ப்ரெஸ்ஸா(ன்)னின் புகைப்படங்களில் ஒரு அசாதாரண, அழகாக நன்கு

அமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு இருக்கும். அது அமைக்கப்பட்டதல்ல, தன் பார்வையில் இயற்கையில் காணும் கோல வடிவத்தைக் காணும் பார்வை தீக்ஷண்யம். அக்கோலம் அமையும் கணத்தைச் சட்டெனக் கண்டு பதிவுசெய்வதாகும். இந்தியா வந்திருந்தபோது, கார்ட்டியே, தற்செயலாகக் காண நேரிட்டது. மகாத்மா காந்தியின் அகால மரணமும் அன்றைய தில்லி நகரக் காட்சிகளும். காந்தியின் இறுதி ஊர்வலக் காட்சி, நாம் திரும்பத் திரும்பக் கண்டு கண் பழகியது கார்ட்டியரது புகைப்படப் பதிவுதான். அது ஆவணமும் ஆயிற்று.

இதுபோல்தான் தொழில்நுட்பம் எதுவானாலும், அது எவ்வளவு சுலபமான செய்நேர்த்தி கொண்டதாக இருந்தாலும், அதை ஒரு யாந்திரிக செயல்முறையின் படைப்பு என்பதிலிருந்து ஒரு கலைப் படைப்பாக்குவது, மனித மனத்தின் கற்பனைதான். அதுதான் தொழில்நுட்பம் தரும் யாந்திரீகத்தின் எல்லைகளை விஸ்தரித்து, புதிய உலகங்களைச் சாத்தியமாக்குகிறது.

பிம்பெட்கா குகைச் சுவர்களில், அவன் ஓவியங்கள் வரைந்தான். அவன் செயல்முறையில் பயன்படுத்திய கருவிகளை மீறிய படைப்பு அவன் வரைந்த ஓவியங்கள். அஸ்ஸீரியன்களும் பாபிலோனியர்களும் வரலாற்றின் ஆரம்ப காலங்களில், முக்கோண வடிவங்களும் புள்ளிகளும் சிறுசிறு கோடுகளும் ஆன க்யூனிஃபார்ம் என்று குறிக்கப்படும் எழுத்துக்களைப் பெரும் பாறைகளில் செதுக்கினார்கள். நமது பிற்காலக் கோயிற்சுவர் கல்வெட்டுக்களைவிட நேர்த்தியானவை. ஒரே சீரானவை. காரணம், நமது கல்வெட்டுக்கால எழுத்துகளைப்போல, சிக்கலான கட்டங்களையும் வளைவுகளையும் கொண்டவை அல்ல. எக்கருவி கொண்டும் அவர்கள் அவ்வெழுத்துக்களைச் செதுக்கியிருக்கக்கூடும். எதுவாக இருந்தாலும் அவர்கள் உலகின் மிக முந்திய காலத்து நாகரிகத்தைச் சமைத்தவர்கள். மனிதக் கற்பனையின், அறிவின், வளத்திற்கு அவர்கள் வாழ்வும் எழுத்துக்களும் சான்று தந்துகொண்டிருப்பன.

பின்னர் உலகின் வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு காலகட்டங்களில் பதனிடப்பட்ட தோல், பனை ஓலை, எழுத்தாணி, துணி, பட்டுத்துணிச்சுருள், காகிதம், எழுதுகோல், அச்சுக்கள் என்று இன்றைய லேஸர் பிரிண்டிங், கம்ப்யூட்டர்வரை எழுத்துத்துறையிலும். அதேபோல் பிம்பெட்கா குகைச் சிற்பங்களிலிருந்து, வாட்ச் செல்போன் டிஜிட்டல் போஸ்டர் பெய்ன்ட்டிங்வரை, ஒரு மிக வேகமான, புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. முந்திய மனிதனின் கைத்திறத்தில் சாதித்ததைவிட, பல மடங்கு நேர்த்தியான படைப்பை பரிபூரணத்துடன் மிக விரைவாக இன்றைய தொழில்நுட்பம் செய்துவிடுகிறது. ஒரு மிகப் பெரும் நூலகத்தின் கோடிக்கணக்கான புத்தகங்கள் அனைத்தையும் ஒரு சின்ன நாணயம் அளவேயான very large scale integrated circuit கொண்ட இலை ஒன்றுக்குள் அடக்கிவிட முடிகிறது. கம்ப்யூட்டர் முன் அமர்ந்துள்ள எவரும், பட்டனைத் தட்டத் தெரிந்தால், எந்த அறிவு/கலைத்துறை பற்றியும் எந்தக் கேள்விக்கும் பதில் தந்துவிட முடியும். ஆனால் அவ்வளவு ஞானத்தையும் தகவல் அம்பாரங்களையும், எண்ணற்ற மனித மூளைகள் முதலில் வரலாற்றின் பல நூற்றாண்டுக் கால நீட்சியில் சேகரித்து, மனித குலத்திற்கு அளித்திருக்க வேண்டும். அவ்வாறு முன்னரே மனித மூளை சேகரித்து அளிக்காத ஒன்றை அந்த ஸிலிகான் சில்லு தந்துவிட முடியாது.

எல்லாம் எலெக்ட்ரானிக் கருவிகள் செய்யும் மாயம்தான் சரி. ஆனாலும் ஹட்ச் செல்போன் விளம்பர போஸ்டருக்கும் மற்றொரு சினிமா விளம்பரத் தட்டிக்கும் உள்ள வித்யாசத்தை நாம் காண முடிகிறது. அந்த வேற்றுமையைத் தந்தது, இரண்டு விளம்பரங்களுக்கும் பின்னுள்ள மனித மூளையின் குண

தராதரம்தான். ஒன்றில் சிறிது நகையுணர்வு, கவித்துவமான கற்பனை, ஒரு சிறிய நாடகம், பளிச்சிடும் வண்ண நேர்த்தி. மற்றதில் இவை அத்தனையும் இல்லாத யந்திரச் செயல்பாடு.

ஸ்ரீனிவாசனின் டிஜிட்டல் சித்திரங்களை மாதிரிக்கெனப் பத்துப் பன்னிரெண்டு பார்த்தேன். அநேகமாக, எல்லாவற்றிலும் ஒரு விசித்திரமான தலைப்பாகையும், நீண்டு நெடிதுயர்ந்த உருவமும், கூர்ப்பாக இருபுறமும் வெளியே நீளும் மீசையும், வேடிக்கையான உடையும், அணிந்த ஓர் உருவம். இந்த உருவம் எதைக் குறிக்கிறது என்று கேட்டேன். 'விவசாயி' என்றார். இந்த விவசாயி, ஆர்.கே. லக்ஷ்மணனின் கேலிச்சித்திரங்களில் காணும் 'பொது மனிதன்' போல. அவன் வியந்து திகைத்து, சில சமயம் மலங்க மலங்க விழிக்கும் சாட்சி பூதன். ஆனால் இந்த விவசாயி மௌனமாகப் பங்கேற்கும் மனிதன். "இன்னமும் என் சொந்த ஊரான தஞ்சை ராஜமன்னார்குடி, கிராமப்புறக் காட்சிகள்தான். என் சிந்தனைகளை விட்டகலாது ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன" என்றார் ஸ்ரீனிவாசன். சாட்சி பூதனாக, பங்கேற்கும் அந்த விவசாயி, ஸ்ரீனிவாசனின் alter egoவாகவே இருக்கலாம். அதெல்லாம் சரி. ஆனால் அவனுக்கு ஏன் இந்த விசித்திரமான ஏதோ ராஜஸ்தானிலிருந்து வரும் விவசாயியைப் போன்ற தோற்றம்?

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கட்டிடக்கலை பொறியியல் வளாகத்தில் ஆசிரியராகப் பணியாற்றிவரும் ஸ்ரீனிவாசன், தன் கிராமத்தைப் பற்றியே நினைக்கிறார். சித்திரங்களை உருவாக்கும்போது அதுவும் அச்சித்திரங்கள், வர்ணத்தில் கைபடாமல், பிரஷ்ஷைக் கையால் தொடாமல், கான்வாஸ் ஏதும் இல்லாமல் கம்ப்யூட்டரில், கீபோர்டைத் தட்டிக்கொண்டும், மௌஸை நகர்த்திக்கொண்டும். இம்மாதிரியான முரண் நகைகளை எப்படிப் புரிந்துகொள்வது? கிராமப்புறம் x அதி நவீன டிஜிட்டல் சித்திரம் என்ற முரண் மாத்திரம் அல்ல. ஒரு அதி நவீன கம்ப்யூட்டர் க்ராஃபிஸ்ட். ஒரு அப்பாவித் தஞ்சை கிராமப்புற விவசாயியாகத் தன்னை உருவகித்துக்கொள்வது இன்னுமொரு முரண்.

இன்னுமொன்று, அறுபதுகளில் வெகுவாகச் சர்ச்சிக்கப்பட்ட, ஸி.பி. ஸ்னோவின் "இரண்டு கலாச்சாரங்கள்" என்ற கோட்பாடு. அறிவியல் ஒரு புறமும் கலை-இலக்கியம்-தத்துவ விசாரம் மறுபுறமும் தனித்தனி உலகங்களாக இயங்கிவருவதாகவும், அறிவியலார், கற்பனையும் உணர்வுகளும், மதிப்புகளும் சார்ந்த கலைகள் பக்கம் தலைவைத்துப்படுப்பதில்லை என்றும், அதேபோல, கலை இலக்கியம் சம்பந்தப்பட்டவர்கள் அறிவியல் துறைகள் பற்றிக் கவலைப்படுவதில்லை எனவும் சொல்லியிருந்தார். இந்தச் சர்ச்சையில் கலந்துகொண்டவர்கள், இதுதான் பெரும்பாலும் உண்மை என்றும், ஆனாலும் கற்பனை வேலை செய்யாத விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் நிகழ்ந்ததில்லை எனவும், தத்துவமும், பேரிலக்கியங்களும் விஞ்ஞானத்திற்கும், அறிவியலுக்கும் துணைபுரிந்துள்ளன என்றும், இது லியர்னார்டோ டாவின்ஸி என்றும் மிகச் சிறந்த ஓவியன், தன் காலத்தை மீறிய சிறந்த தொழில்நுட்ப நிபுணனாகவும் இருந்திருக்கிறார் என்றும் கூறினார்கள். இதற்கும் நிறையச் சான்றுகள் காலம் காலமாக உண்டெனினும், பெரும்பாலும் இவ்விரண்டும் ஒன்றையொன்று புரிந்துகொள்ளாத கைகோர்த்துக்கொள்ளாத தனித்தனி உலகங்களாக இருந்துள்ளன என்பதே உண்மை.

கலைத் துறைகள் அவ்வப்போது விஞ்ஞான அறிவியல் துறைகளால் பாதிக்கப்பட்டும், அதே சமயம் அத்துறைகளை இவையும் பாதித்துள்ளது பற்றியும் நானும் எழுதியிருக்கிறேன் (பார்க்க: "என் கலை வெளிப்பயணங்கள்")இது ஒரு அவரசத்தில் சட்டெனப் பேசுவதற்கான தயாரிப்புக் கட்டுரையாக எழுதப்பட்டது. இதைப் பெரிய அளவில் முழுமையாகச் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தேன்.

இப்படித்தான் பல விஷயங்கள் "இப்போதைக்கு இந்த அவசரத்துக்கு இது போதும்" என்று எழுதப்பட்டவை, அவ்வளவோடேயே, பின்னால் தொடப்படாமல் விடப்பட்டுள்ளன. (தொடரும்)

இதையெல்லாம் இப்போது சொல்லக் காரணம் பொறியியல் நிபுணராகவும், அதே சமயம் ஒரு ஓவியக் கலைஞனாகவும் இருவேறு உலகங்களைத் தன்னுள் ஒரு முரணாகக் கொள்ளாமல், இரண்டும் ஒன்றிணைந்த ஒரு ஆளுமையாக ஸ்ரீனிவாசன் நம்முன் நிற்பதைக் காட்டத்தான். இத்தகைய ஒரு **integrated personality**யென, ஒரு பெரும் தொடர்ச்சியையேகூட நாம் காணலாம். தேடினால் லியனார்டோ டாவின்ஸியிலிருந்து ஸத்யஜித்ரேவரை, நினைத்துப் பார்த்தால் ட்ராட்ஸ்கி மருதுவும் இச்சங்கிலித் தொடரில் ஒருவர்தான்.

எனக்கு இது ஒரு விந்தையான உலகம். ஸ்ரீனிவாசனின் ஸ்கெட்ச் புத்தகத்தைப் பார்த்தேன். முன்னால் பேனா, இங்க் இவற்றைக் கையாண்டவர்தான். மிக லாவகமாக, வழிந்தோடும் கோடுகள் ஸ்ரீனிவாசனுடையவை.. இப்படி வரையும்போது கிடைக்கும் மகிழ்ச்சி, புத்துணர்வு, ஒன்றை சிருஷ்டிக்கிறோம் என்ற உற்சாகம் கம்ப்யூட்டரில் வேலை செய்யும்போது கிடைக்கிறதா என்று கேட்டேன்

"ஆம்" என்றார் கேட்பானேன். பிரஷ்ஷால் கோடிழுப்பது போன்றுதான், மௌஸையும் நகர்த்துகிறோம். நகர்த்துவதும் பிரஷைக் கையாளவ்தும் கையும் விரல்களும் அல்ல. கையும் விரல்களும் மனிதக் கற்பனை மனத்தின் நீட்சிகள். வரைவது விரல்களோ, பிரஷ்ஷோ மௌஸோ அல்ல. பின்னிருந்து இயக்கும் மனித மனத்தின் சூட்சுமக் கற்பனை. தீபாவளி பட்டாசு வெடித்துக் கைகளை இழந்த ஒரு ட்ராயிங் மாஸ்டர் முடமாகிப்போன கைகளினிடையில் சாக்பீஸை இடுக்கிக்கொண்டு போர்டில் வரைவதை நான் பார்த்திருக்கிறேன் சிறு வயதில்.

இதை இன்னுமொரு வகையில் சொல்லிப் பார்க்கலாம். க்ரிஸ்டல் க்ளாஸ் பெயிண்டிட்டிங் என்பார்கள். அதை பெய்ண்ட்டிங் என்பதா, எப்படி அது பெய்ண்ட்டிங் ஆகும் என்பது தெரியவில்லை. திடமான, பாளம் பாளமாக உள்ள க்ளாஸுக்குள் சித்திரம் தோன்றும். அம்மாதிரியான ஒரு கண்காட்சியை அறுபதுகளில் நான் டெல்லியில் பார்த்திருக்கிறேன். அவற்றில் அக்காலங்களில் நாட்டின் புகழ்பெற்ற ஓவியர்களிடம் சித்திரங்கள் எழுதி வாங்கி, பெல்ஜியத்திற்கோ அல்லது வேறு எங்கோ தொழிற்சாலைக்கு அனுப்பி, அச்சித்திரங்களை உள்ளடக்கிய க்ரிஸ்டல் கண்ணாடிப் பாளங்கள் தயாரித்து காட்சிக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில் உதாரணத்திற்கு ஜமினி ராயின் குழலூதும் கண்ணன் சித்திரம் ஒன்று. க்ளாஸுக்குள் தென்படுவது ஜமினி ராய் வரைந்த சித்திரம் போன்ற ஒன்று பதிவாகியிருந்தது வாஸ்தவம். அதை உருவாக்கியது ஜமினி ராய் அல்ல. கண்ணாடித் தொழிற்சாலைத் தொழிலாளி. பார்த்துச் செய்ய ஒரு சித்திரம் அவர் வரைந்ததுதான். ஆனால் கண்ணாடிக்குள் அதேபோல் உருவாக்கியது தொழிற்சாலையில் உள்ள ஒரு தொழில்நுட்ப நிபுணன். அக்கிரிஸ்டல் கண்ணாடிக்கு அவன் உரிமை கொண்டாடிக்கொள்ள முடியாது. அது ஜமினி ராயினது தான்.

நமது பார்வைகள் மாறுகின்றன. தொழில்நுட்பம் அசுரத்தனமாக வளர்கிறது. இருப்பினும் மனித

மூளையும் கற்பனையும் இல்லாது எதுவும் நடப்பதில்லை.

ஸ்ரீனிவாசன் தான் நினைத்ததை கம்ப்யூட்டரில் செய்துகாட்ட முடியும் கான்வாஸில், எண்ணெய் வண்ணத்தினாலும் பிரஷ்ஷினாலும் செய்ய முடியாததையெல்லாம் செய்துகாட்ட முடிகிறது. புதுப் புது சவால்களை அது முன்வைக்கும். பழைய சவால்களை அது எளிதாக்கும். இருப்பினும் என்ன செய்ய வேண்டும் என்ற எண்ணம், திட்டம், பார்வை அவருக்கு இருக்க வேண்டும்.

ஸ்ரீனிவாசனிடம் நான் புதிதாகக் காண்பதும் ஆச்சரியப்படுவதும் அவரது அயராத உழைப்பு. நூற்றுக்கணக்கான மணிகள் அவர் செலவிடுவதாகச் சொல்கிறார். எப்படி என்று விளக்கவும் செய்கிறார். ஒரு பெண்ணின் பாவாடை மடிப்பு என்று நாம் பார்க்கும் ஒரு சிறிய பகுதியின் அந்த மடிப்பில் ஒரு சின்ன ஒளியும் திட்டமான மடிப்பில் ஒரு வண்ண மாற்றத்தைப் பார்க்கிறோம். ஆனால் அவர் அதைப் பல மடங்கு பெரிதாக்கிக் காட்டுகிறபோது அந்த வண்ண மாற்றங்களிலேயே எண்ணற்ற கலவைகள் படிப்படியான வண்ணச் சலனங்கள் தீட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இது அத்தனையும் நான் இழை இழையாகச் செய்தது என்றார். செய்யும் காரியத்தை எளிதாக்கத் தரப்பட்ட தொழில்நுட்பம் அக்காரியத்தை இன்னும் சிக்கல்கொண்டதாக ஆக்கியுள்ள விடம்பனம் நம்முன் நிற்கிறது. ஆனால் இது சித்திரம் அச்சுப்பதிவாகும்போது, எவ்வளவு பெரிதாகப் பதிவுசெய்கிறோமோ அதற்கு ஏற்பவே இந்த நுணுக்கங்கள் தெரிய வாய்ப்புண்டு.

ஆனால் எந்த மகத்தான படைப்பையும் (masterpiece) ஒரு இயல்பான, 4 அடி 5 அடி தூரத்திலிருந்தே பார்க்கப் பழக்கப்பட்டிருக்கிறோம், ஸிஸ்டைன் சாப்பலின் விட்ட வளைவுகளில் தீட்டப்பட்ட சுவர்ச் சித்திரங்களைக்கூட, கழுத்து வலிக்க அண்ணாந்து பார்க்க வேண்டும் அல்லது மல்லாக்கத் தரையில் படுத்துக்கொள்ள வேண்டும்.

இவை வரை நுட்பம் பற்றி வரையப்பட்டு முழுமையான ஸ்ரீனிவாசனின் சித்திரங்கள் மிக எளிதான ஒரு வர்ணணைகளுள் அடங்குபவை. அவரது இளமைக் கால ராஜ மன்னாடிகுடியின் கிராமக் கட்சிகள் - அதில் ஒரு சாட்சியாக, அவரது பிரதியாக, ஒரு விவசாயியும் இடம்பெறுகிறான். கிராமத்துக் கோவில் திருவிழா, வயல்வெளி, பொய்க்கால் குதிரை ஆட்டம், கிராமத்து தெருக்கூத்து, அல்லது ஏதோ ஒரு நாடகக் காட்சி என இவற்றில் பெருங்கூட்டம் இருப்பதில்லை.

இதற்குமேல், இவரது சித்திரங்களில் ஒரு பளிச்சிட்டு ஒளிர்விடும் குணம் உள்ளது. பொய்க்கால் குதிரைச் சித்திரத்தைப் பார்த்தால், இருள் சூழ்ந்த வெளியில் ஒரு மாயம் போல பிரமை போல அது பளிச்சிட்டுத் தெரிகிறது. அது அங்கு இருக்கிறதா அல்லது ஒரு பிரமையா? கனவுக்கும் நினைவுக்கும் இடைப்பட்ட ஒரு நிலை. யதார்த்தத்தின் பிரஸன்னம் அங்கு உள்ளதுதான். அதே சமயம் அது பிரமை போலும் தோன்றுகிறது. அதையும் நம்மையும் ஒரு மாய இடைவெளி பிரிக்கிறது. அது ஒரு வெளியில், நாம் ஒரு வெளியில் இடையில் ஒரு வாயில். கண்ணில் படாத வாயில். நம் வீடுகளிலேயே வாயில் இரண்டு வேறுபட்ட காரியார்த்த இடங்களைப் பிரிக்கிறது. சமையலறைக்கும் கூடத்திற்கும் இடையே. கூடத்திற்கும் இடைகழிக்கும் இடையே. இடைகழிக்கும் வாசலுக்கும் இடையே. இவ்வாயிலின் ஒரு புறத்தில் நடப்பது மறுபுறத்தில் நடப்பது இல்லை.

இதை liminality என்பார்கள். இரு வேறு மன நிலைகளுக்கான இடைவெளி.

இதையெல்லாம் ஸ்ரீனிவாசன் நினைத்துத்தான் செய்தார் என்று சொல்ல முடியாது. இதுபற்றியெல்லாம் அவர் சிந்தித்திருக்காமலே இருக்கலாம். "நான் நினைக்காததையெல்லாம் சொல்கிறீர்கள்" என்றுகூட அவர் சொல்லலாம். ஒரு கலைப் படைப்பின் காரியமே அதுதான். படைத்தவன் நினைத்ததற்கு மாறாக அல்லது அதற்கும் மேலான அர்த்தங்களை அது தருமானால், அப்படைப்பு கலையாகிறது. எல்லாக் கலைப் படைப்புகளுமே ஒரு குறியீடு. ஒரு உருவகம். பலருக்கு பல அர்த்தங்களைத் தரும்.

இதற்கு மாறாக, படைத்தவன் வார்த்தைகளை ஏற்று அவன் சொல்வதெல்லாம் அதில் இருப்பதாக நாம் எண்ணத் தேவையில்லை. நாம் காணும் அர்த்தங்கள்தாம் நமக்கு அப்படைப்பு தரும் அர்த்தம். அகிலனும், சுஜாதாவும், சங்கரும் மணிரத்னமும் தம் படைப்புகளில் இருப்பதாகச் சொல்வதையெல்லாம் இருப்பதாக நாம் கொள்கிறோமோ? அது போல்தான்.

# நிறங்களால் எழுதிய கவிதைகள்

பாவண்ணன்

01.05.05

19.03.05 அன்று பெங்களூரில் லக்ஷ்ண ஓவிய வளாகத்தில் தமிழகத்தைச் சேர்ந்த - ளைஞர்களான கே.பாலசுப்ரமணியன், என்.சீனிவாசன் - ருவருடைய ஓவியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கர்நாடகத்தின் மிகச்சிறந்த ஓவியரான எஸ்.ஜி.வாசுதேவ் அவர்களால் அந்த ஓவியக் கண்காட்சி தொடங்கப்பட்டது. வாழ்த்துரை நிகழ்த்தியவர் காலச்சுவடு கண்ணன்.

டிஜிடல் முறையில் வரையப்பட்ட சீனிவாசனுடைய ஓவியங்கள் கண்ணைக் கவர்கின்றன. வண்ணச்சேர்க்கைகளும் அழுத்தமான கோடுகளும் நெளிவுகளும் கொண்ட ஒவ்வொரு ஒவியமும் பார்வையாளனைக் கட்டி நிறுத்தும்வண்ணம் - ருக்கின்றன. பச்சைவண்ணத்தின் எல்லா வகைப்பிரிவுகளிலும் அடங்கக்கூடிய கோடுகளால் ஆன பின்னணியில் தலைகவிழ்ந்திருக்கும் ஒரு நங்கையின் சித்திரம் வசீகரமாக உள்ளது. நங்கையும் பச்சைவண்ணத்தில் காட்சியளிக்கிறாள். அவள் கூந்தல் நாலாபக்கமும் பறந்தபடி - ருக்கிறது. நாலாபக்கமும் சுழன்றுசுழன்று அலைபாயும் கூந்தல் கோடுகள் விரிந்த பின்னணியில் எங்கெங்கும் படர்ந்து நெளிவதைப்போன்ற தோற்றத்தைத் தருகிறது. மறுகணமே அக்கோடுகள் தனிப்பட்டவை அல்ல என்ற எண்ணமும் கூந்தல் கற்றையின் நீட்சியே என்னும் எண்ணமும் ஏற்படுகிறது. கித்தான் முழுக்க அலைபாயும் கூந்தலின் விரிப்பானபிறகு அந்த நங்கை பூமியின் படிமமாகவே மாறிவிடுகிறாள். - ப்போது காத்திருப்பது நங்கை அல்ல, - ந்த பூமி. அவிழ்ந்த கூந்தலுடன் தலைகவிழ்ந்திருக்கும் அளவுக்கு

- ப்பூமிக்கு நிகழ்ந்த அவமானம் என்ன என்னும் கேள்வி எழுகிறது. திரௌபதைக்கு நிகழ்ந்த அவமானம் நினைவுக்கு வருகிறது. அதைச் சரிசெய்ய நேர்ந்த போரும் அதனால் உண்டான அழிவும் நினைவுக்கு வருகின்றன. தலைகவிழந்திருக்கும் புவியின் கோலம் எதன் அழிவுக்கான

முன்னுரையோ என்ற கேள்வியுடன் தத்தளிக்கும்போது அப்பச்சை நிறம் கண்ணில் மறுபடியும் மோதுகிறது. - ந்த மண் - ழக்கப்போவது - ந்தப் பசுமையைத்தானோ என்ற எண்ணம் சோகமுடன் உருவாகிறது. ஒரு கவிதையை அசைபோடுவதைப்போல அந்த ஓவியம் - ப்படி ஏராளமான எண்ணங்களை அலையலையாக எழுப்பியவண்ணம் உள்ளன.

வசீகரமான மற்றொரு சித்திரம் வள்ளியும் தெய்வானையும் - டமும் வலமுமாக முருகன் மயில்மீது அமர்ந்த கோலத்தைக் காட்சிப்படுத்தும் சித்திரம். முதல் பார்வையில் அது தெய்வம் வலம்வரும் ஒரு காட்சியாகவே படுகிறது. மெல்லமெல்ல அதன் கோடுகள்மீது கவனம் குவியும்போது மாறுபட்ட பொருள் உருவாகிறது. மயிலின் கால்கள் பாம்பொன்றைக் கவ்வியபடி - ருக்கிறது. அதே நேரத்தில் அதன் முதுகு முருகனையும் அவனுடைய துணைவியரையும் சுமந்து பறந்தபடியும் உள்ளது. பாம்பை மயில் கவ்வியது - ச்சையின் காரணமாக. முருகனைச் சுமப்பது கடமையின் காரணமாக. மனத்தின் - ரட்டை நிலைகள் மயிலை முன்வைத்து

காட்சிப்படுத்தப்பட்டிருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது. - தற்கு நிகரான எண்ண அலைகளை எழுப்புகிற மற்றொரு சித்திரம் மயிலும் முருகனும் கொண்ட - ன்னொரு சித்திரம். மயில் முருகனைச் சுமக்கிறது. முருகன் தன் - டுப்பில் தன் மனத்துக்குப் பிடித்த மங்கையைச் சுமக்கிறான். பறக்கும் மயிலை ஒருவிதத்தில் - ந்தக் காற்றும் விண்ணும் கூடிச் சுமப்பதாகவே எடுத்துக்கொண்டால் புவியில் தோன்றியிருக்கும் ஒவ்வொரு உயிருக்கும் சுமை - யற்கையானது என்கிற எண்ணம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. - யற்கையான சுமையை - னிமையான சுமையாக எப்படி வசப்படுத்திக்கொள்ளப்போகிறோம் என்பதில்தான் வாழ்வில் ரகசியமே அடங்கிக்கிடக்கிறதுபோலும்.

சீனிவாசன் கட்டமைக்கும் உருவத்துக்கும் வண்ணத்துக்கும் நேர்மாறானவையாக பாலசுப்பரமணியனுடைய உருவங்களும் வண்ணக்கலவையும் - ருப்பினும் அவையும் சீனிவாசனுடைய ஓவியங்களைப்போலவே வாழ்வின் ரகசியப் பாதையை வேறொரு கோணத்தில்

அனுபவப்படுத்துகின்றன. பாலசுப்பிரமணியனுடைய ஓவியங்களில் முழுக்கமுழுக்க - டம்பெற்றிருப்பவை நேர்முக்கோணங்கள், தலைகழ் முக்கோணங்கள், பக்கவாட்டில் சரிந்த முக்கோணங்கள், சதுரங்கள், வட்டங்கள், புள்ளிகள் ஆகியவை. ஆனால் அவை அபூர்வமான கலவையால் ஒருசமயம் முகத்தைப்போல மாற்றம் பெறுகின்றன. மற்றொரு சமயத்தில் பாதங்களாகின்றன. பிறிதொரு சமயத்தில் பின்னல், கால்கள், - டை என வேறொன்றாக மாற்றம் கொள்கின்றன. முதல் பார்வைக்கு அப்படிப் படுவதில்லை. கூட்டியும் பிரித்தும் விலக்கியும் கோணங்களை மாற்றிமாற்றிப் பார்க்கும்போது அப்படி ஒரு காட்சி கிடைக்கிறது. தரையில் உதிர்க்கப்பட்ட பொம்மையின் ஒவ்வொரு உடல்உறுப்பையும் சுதந்தரமாக - டம்மாற்றிப் பொருத்தி உயிரூட்டும் கலை வசப்பட்ட ஒரு மந்திரவாதியின் விரல்கள் தன்னிச்சையாக உருவாக்கிய சிற்றுருவங்களும் பேருருவங்களும் - ணைந்தவையாக கித்தான் முழுக்க கலைந்து கிடக்கின்றன பாலசுப்பிரமணியனுடைய ஓவியங்கள். கலைந்திருப்பினும் கண்ணுக்குப் புலப்படாத ஓர் ஒழுங்கில் அவை - ணைந்திருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஒரு ஓவியத்தில் மேலே ஒளிவட்டம். கிட்டத்தட்ட சூரியனை ஞாபகப்படுத்துவதைப்போல. கீழே ஒரு தொட்டி. அது மண்ணின் மடியைப்போல. தொட்டியிலிருந்து மெல்லமெல்ல கிளைத்தெழுந்து நீள்கிறது ஒரு பச்சைக்கொடி. நீண்டுநீண்டு அக்கொடி மேலே வட்டத்தைத் தீண்டுகிறது. வட்டத்தைத் தீண்டிய நிலையில் ஒரு பரவசம் அக்கொடியில் நெளிந்தாடுவதைப்போலவே அதைப் பார்க்கும் நம் மனத்திலும் நெளிந்தாடுகிறது. அக்கொடியின் வேகத்தை - ச்சையின் வேகமாக எடுத்துக்கொண்டால் - ச்சையை மானுடமனம் ஏற்கவேண்டுமா, துறக்கவேண்டுமா என்றொரு கேள்வி உடனடியாக எழுகிறது. கேள்விகளும் துணைக்கேள்விகளும் நம்மை அழைத்துச் செல்லும் தொலைவு அதிகம். அதுவே ஓவியங்கள் நமக்கு ஊட்டக்கூடிய பேரனுபவம். அக்கொடியின் அருகிலேயே முக்கால் கித்தானை அடைத்தபடி - ருப்பது வேறொரு சித்திரம். முழு நிலவின் குளுமையின்கீழே வீற்றிருக்கும் ஒரு குடிசையின் தோற்றம். அல்லது அமைதியாக எல்லாவற்றையும் உற்று நோக்கியபடி அசையாது தவநிலையில் நிற்கும் ஒரு மானுடனின் தோற்றம். அந்த வீட்டை

அல்லது மானுடனைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் தொங்கி அசைபவை ஒரு பார்வைக்கு வரவேற்புத் தோரணங்களாகக் காட்சியளிக்கிறது. மற்றொரு பார்வையில் அறுத்து வீழ்த்துவதற்காக எடுத்துவரப்பட்ட ரம்பத்தின் பற்களாகக் காட்சியளிக்கிறது. - ப்போது முதன்முதலில் நம் மனத்தில் எழுந்த - ச்சையை மானுடமனம் ஏற்கவேண்டுமா,

துறக்கவேண்டுமா என்னும் கேள்வி மறுபடியும் எழுகிறது. அதே கணத்தில் நம் மனம் பொருத்தமான ஒரு விடையைக் கண்டடைகிறது. வாழும் - ச்சை வாழ்வதற்குப் பொருத்தமானதாக - ருப்பின் ஏற்றலும் - ல்லை, துறத்தலும் - ல்லை என்று தோன்றுகிறது. கொடியின் - ச்சை விண்ணைநோக்கி எம்பி சூரியனைத் தீண்டுவதல்ல, மண்ணில் படர்ந்து பசுமையைப் பரப்புவதுதான் என்று அப்போது புரிகிறது. எளிமையான ஜியோமிதி வடிவங்களைமட்டுமே கட்டுக்கடங்கிய எண்ணிக்கையில் உருவாக்கி, பிறகு அவற்றை அழகாக - ணைத்தும் கலைத்தும் எண்ணற்ற எண்ணங்களை உருவாக்கியபடியிருக்கும் பாலசுப்பிரமணியனுடைய ஒவியங்கள் கொடுக்கும் அனுபவம் மிகவும் - னிமையானது.